5. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

(அ) தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 மீதான ஆய்வுக் குழு — தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றபேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். (குறுக்கீடு)*

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.*

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 125 முதல் 130 வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அந்த நேரம் எல்லாம் முடிந்துவிட்டது.*